DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| S.T.C.NO. 1676 / 2018 | | Crime No.: | Station : |
| PW : 1 | | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | முருகேசன் | Caste | |
| Father's Name | குட்டியாக் கவுண்டர் | Calling | லாரி ஓட்டுநர் |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 70 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 13.02.2025 |

**(எதிரி ஆஜர்)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

1. 2019-ம் வருடம் நான் விற்பனை செய்ததாக சொல்லப்படும் நிலத்திற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது. அந்த ஆவணம் என்னிடம் இல்லை. மேற்படி சொத்தானது என் பெயரில்தான் இருந்தது என்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் ரிஜிஸ்டர் ஆபிசில் மனு போட்டுத்தான் வாங்க வேண்டும். மேற்படி இடத்தை நான் யாருக்கு விற்பனை செய்தேன் என்றால் சத்தியமங்கலம் தேள்கரடு வீதியிலுள்ள ஒரு பெண்மணிக்குத்தான் விற்பனை செய்தேன். அவரது பெயர் ஞாபகம் இல்லை. எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்தேன் என்றால் ரூ.10,00,000/-.

2. மேற்படி ரூ.10,00,000/- பணத்தை வங்கியில் செலுத்தியிருந்தேனா என்றால் இல்லை 1 மாதத்தில் எனது மகளின் திருமணம் வர இருந்ததால் கையில்தான் பணத்தை வைத்திருந்தேன். திருச்சங்கோட்டைச் சேர்ந்த பொன்னுசாமியின் மகளை எனது மகனுக்கு திருமணம் செய்துகொடுத்துள்ளேனா என்றால் சரிதான். மேற்படி பொன்னுசாமியிடமிருந்து எதிரிக்கு நான் பணம் வாங்கிக் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி பணத்தை நான் எதிரிக்கு எங்கு வைத்துக் கொடுத்தேன் என்றால் எதிரியின் கடையில் வைத்துக் கொடுத்தேன். அந்தப் பணத்திற்காக பொன்னுசாமி திருச்சங்கோட்டிலுள்ள நீதிமன்றத்தில் எதிரியின் மீது காசோலை வழக்கு ஒன்று தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எதிரி பழனிச்சாமிக்கு பல இடங்களில் சொத்துக்கள் உள்ளது என்றாலும், நகைக்கடை உள்ளது என்றாலும், அவர் வசதி நபர் என்றாலும் அதுபற்றி எனக்குத் நேரடியாகத் தெரியாது தனலட்சுமி அப்படி சொன்னார். எதிரியின் வீடு எங்குள்ளது என்று எனக்குத் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிரி பல கோடி சொத்துக்களுக்கு அதிபதி என்றாலும், என்னிடம கடன் வாங்கவேண்டிய அவசியம் எதிரிக்கு இல்லை என்றாலும சரியல்ல.

4. எதிரி இருடியம் தொழில் சம்மந்தமாக 3 நபர்கள் எதிரியை ஏமாற்றியுள்ளார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியும். செய்தித்தாள்களில் செய்திகள் வந்தது. தனலட்சுமி மீதும் எதிரி இருடியம் தொழில் சம்மந்தமாக ஏமாற்றப்பட்டதற்கு கோவை வடவள்ளி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்ட விபரம் தெரியுமா என்றால் தனலட்சுமி சொல்லி எனக்குத் தெரியும். 2019–க்கு முன்பு எனக்கும், எதிரி பழனிச்சாமிக்கும் கொடுக்கல் வாங்கல் உள்ளதா என்றால் இல்லை 2018–ல் இருந்து. தனலட்சுமி எதிரிக்கும், எதிரிக்கும் உறவினர்தான் என்றால் சரிதான். வியாபர நிமித்தமாக எதிரி கடையில் வைத்திருந்த காசோலைகளை தனலட்சுமி திருடிச் சென்றுவிட்டதாக காவல் நிலையத்தில் தனலட்சுமி மீது புகார் கொடுத்துள்ளார் என்றாலும் அதன்பின்பு வங்கியில் Stop payment கொடுத்து மக்கள் குரல் செய்தித்தாள்களிலும் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றாலும், அதிலுள்ள ஒரு காசோலைதான் இந்த வழக்குக் காசோலை என்றாலும் அதுகுறித்து எனக்கு எதிரி கொடுக்கப்பட்ட பதிலறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அதுபற்றி எனக்குத் தெரியாது.

5. எதிரி எனக்குக் கொடுத்த பதிலறிவிப்பிலுள்ள சங்கதிகளை நான் எனது வழக்குரைஞரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி பதிலறிவிப்பில் கூறியுள்ள சங்கதிகளை நான் தெரிந்துகொண்டேனா என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிரி பதிலறிவிப்பை எனது வழக்குரைஞருக்கு அதன் நகலை எனக்கு தபால் மூலமாக அனுப்பியுள்ளார் என்றாலும் அதை நான்

பெற்றுக்கொண்டு தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் இல்லை, எதிரி எனக்கு எந்த பதிலறிவிப்பும் அனுப்பவில்லை.

6. எந்த வாங்கிக்குரிய காசோலை என்றால் ஐ.ஓ.பி வங்கி. காசோலையில் எத்தனை கையெழுத்து செய்துள்ளார் என்றால் ஒரு கையெழுத்து. கையெழுத்தை தமிழில் செய்தாரா அல்லது ஆங்கிலத்தில் செய்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. 3 காசோலைகளை எதிரி என்னிடம் கொடுத்தாரா என்றால் ஆமாம். கையெழுத்தை தமிழில் செய்தாரா அல்லது ஆங்கிலத்தில் செய்தாரா என்றால் அதை நான் பார்க்கவில்லை. காசோலையில் முத்திரை ஏதேனும் உள்ளதா என்றால் அதை நான் பார்க்கவில்லை. காசோலையில் எனது பெயர் எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது.

7. காசோலைக்குப் பின்புறம் நானும், எதிரியும் கையெழுத்து செய்தோமா என்றால் இல்லை. காசோலை எதிரி என்னிடம் கொடுக்கவில்லை என்பதால்தான் மேற்படி விபரங்கள் எனக்குத் தெரியவில்லை என்றால் சரியல்ல, எதிரிதான் காசோலையை அவரது கடையில் வைத்து எனக்குக் கொடுத்தார். கடையின் உரிமையாளர் யார் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிரியின் அப்பா பெயர் என்ன என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிரிக்கு எவ்வளவு குழந்தைகள் என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. எதிரியின் குடும்பத்தைப் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியுமா என்றால் தெரியாது.

8. தனலட்சுமி என்பவர் திருடிக்கொடுத்த காசோலையின் பேரில் இந்த வழக்கை எதிரியிடமிருந்து பணம் பறிக்கும் எண்ணத்தில் நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யானது என்பதால்தான் என்னால் சரிவர பதில் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. ரூ.4,00,000/– கொடுக்கும் அளவுக்கு எனக்கு வசதி என்றால் இல்லை இடத்தை விற்ற பணத்தில்தான் கடன் கொடுத்தேன்.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.